## எல்பிட்டிய பிரதேச சபை
## காலி மாவட்டம்

------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2016 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 31 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், 2016 ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 நவம்பர் 11 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்ந்து, எல்பிடிய பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(அ) மீளாய்வாண்டிற்கான வீதவரி கிடைத்தவை ரூபா 29,252 தொகை மிகையாக கணக்கீடு செய்திருந்தமையினால் பெற வேண்டிய வீதவரி அதே பெறுமதியினால் குறைவாகக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) கடந்த ஆண்டொன்றின் போது சபைக்குச் சொந்தமான வாகன விபத்து ஒன்று தெடர்பாக குற்றவளியாக் காணப்பட்ட சாரதியிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 97,412 இற்கான பெறுமதியினை மீளாய்வாண்டிற்கான வருமானம் ஒன்றென கணக்கீடு செய்யப்பட்டமையால் ஆண்டிற்கான வருமானம் மிகையாகக் காட்டப்பட்டிருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கூட்டுத் தொகை ரூபா 23,399,856 தொகைக்கான 05 கணக்கு மீதிகள் தொடர்பாக துணைப்பதிவேடுகள் மற்றும் அறிக்கைகளில் காணப்படும் மீதிகளிடையே வித்தியாசங்கள் காணப்பட்டதுடன் கூட்டுத்தொகை ரூபா 5,341,692 தொகைக்கான சமமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

#### 1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படன

(அ) மூன்று வருடங்களை விட மிகையான காலம் முதல் பெற வேண்டியிருந்த ரூபா 208,280, தொகைக்கான பெகோ இயந்திர வாடகை வருமானம் மிளாய்வாண்டின் போதும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு இறுதி அளவில் சபையின் அதிகார பிரதேசத்தில் செயற்படுத்தப்பட்ட அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக உள்ளூராட்சி ஆணையாளரிடம் கிடைக்க வேண்டியிருந்த ரூபா 15,298,351 இற்கான தொகை மிளாய்வாண்டின் போது அறவீடு செய்திருக்கவில்லை அவற்றில் ரூபா 6,624,192 இற்கான தொகையொன்று கடந்த ஆண்டிற்கு முன்னர் இருந்து பெற வேண்டியிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது சபையின் அதிகாரப் பிரதேசத்தில் மேற்கொள்ளபட்டிருந்த 08 அபிவிருத்தி செயற்திட்டங்கள் மற்றும் கடந்த ஆண்டுகளில் மேற் கொள்ளப்பட்டிருந்த செயற்திட்டம் ஒன்றிற்கான செலத்த வேண்டிக் காணப்பட்ட ரூபா 1,401,309 தொகை வருட இறுதி அளவிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

கூட்டுத்தொகை ரூபா 110,273,732 தெகைக்கான நிலையான சொத்துக்கள் தொடர்பாக வரை ஆக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பதிவேடும், ரூபா 684,000 தொகைகான காணி நட்டஈடு தொடர்பாக நட்டஈடு பெற்ற காணி, நட்டஈடு செலுத்திய நிறுவனம் தொடர்பான விபரங்களும், கூட்டிய பெறுமதி ரூபா 928,068 தொகைக்கான ஆயுர்வேத இருப்பு மற்றும் கலஞ்சிய இறுப்பு தொடர்பாக அட்டவணைகள் சமர்பிக்கபடாமையால் கணக்காய்வின் போது அவற்றை திருப்திகரமான பரிசோதனை செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

கீழே விபரிக்கப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி 218 | சபைக்குச் சொந்தமான காணிகள் கட்டிடங்கள் மற்றும் ஆண்டிற்கு ஒரு முறையேனும் பரிசோதனை செய்திருக்கவில்லை. |
| (ஆ) உள்ளூராட்சி ஆணையாளர் 2010 திசெம்பர் 27 திகதி தபபா/பபாகொ/2010/01 சுற்றறிக்கை | சபைக்குச் சொந்தமான 55 கடைகள் மற்றும் 30 அங்காடிக் கூடங்களுக்காக வாடகை ஒப்பந்தத்தை புதுப்பிப்பதற்காக நடவடிக்கைகள் எடுத்திருந்ததுடன், மேற்கொண்டிருந்த உடன்படிக்கை 20 வருடங்களை விட பழமைவாய்ந்ததாக இருந்தது. |
| (இ) மின்சார மற்றும் வலு அமைச்சக 2010 ஆகஸ்ட் 17 ஆம் திகதி பீஈ/02/01 இலக்கம் கொண்ட சுற்றறிக்கை | வீதி விளக்கு பதிவேடு ஒன்று பேணப்பட்டு புதிய வீதி விளக்குகளுக்காக அங்கீகார பெறல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. வீதி விளக்குகளை பராமரிப்பதற்கு சபையினால் செலவிடப்பட்டிருந்த ரூபா 378,443 இற்கான செலவுகளை மீளளிப்பு செய்வதற்கு முடியாதிருந்தது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி பெறுபேறுகள்

கணக்காய்விற்கு சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,080,170 தொகையாக இருந்ததுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,428,007 தொகையாக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்த போது மீளாய்வண்டின் நிதி விளைவுகளில் ரூபா 7,347,837 இற்கான வீழ்ச்சி ஒன்றை காட்டியது.

### 2.2 தொழிற்படு மூலதன முகாமைத்துவம்

முன்னைய ஆண்டுகளின் நிலைமையுடன் மீளாய்வாண்டின் நிலைமையை இணக்கஞ் செய்த போது நடைமுறை மற்றும் விரைவு விகிதசாரங்களில் திருப்திகரமான நிலைமை ஒன்றினை காட்டிய போதிலும் நடைமுறை சொத்துக்களில் காணப்பட்ட ரூபா 15,298,351 இற்கான மூலதனத் தொகை பணம் மற்றும் ரூபா 23,651,170 இற்கான நிலுவை கடன் மீதி காணப்படாமையால் விகிதாசாரங்கிளின் பிரகாரம் திரவத்தன்மை நிலைமை காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 2.3 வருமான நிருவாகம்

#### 2.3.1 வீதவரி மற்றும் வரி

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிக் காணப்பட்ட கூட்டுத்தொகை ரூபா 12.693,379 தொகைகான வீதவரி தொகையில் மீளாய்வாண்டின் போது அறவீடுகள் 21 சதவீத அளவான குறைந்த பெறுமதியினைக் கொண்டிருந்தது. அதன் காரணமாக வருட ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 9,162,732 தொகையாக காணப்பட்ட நிலுவை வீதவரி மீதி வருட இறுதி அளவில் ரூபா 10,048,619 தொகை வரை அதிகரித்திருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகள் தொடர்பாக அறவிடப்பட வேண்டிய கூட்டுத்தொகை ரூபா 358,290 தொகைக்கான ஏக்கர் வரியில் ஆண்டின்போது ரூபா 119,647 இற்கான தொகை மாத்திரம் அறவீடு செய்யப்பட்டிருந்ததுடன், அது 33 சதவீத அளவான குறைந்த பெறுமதியினை கொண்டிருந்தது.

#### 2.3.2 கடை வாடகை

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 1,255,893 தொகையான நிலுவை கடை வாடகை மீதி வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 2,233,775 தொகை வரை அதிகரித்திருந்ததுடன், ஆண்டின் போது ரூபா 1,227,203 இற்கான தொகை ஒன்று மாத்திரம் அறவீடு செய்திருந்தது அது பெற வேண்டிய தொகையில் 35 சதவீதமான குறைந்த சதவிதமாகவே இருந்தது, அதன் பிரகாரம் சபையினால் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 159(அ) இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

#### 2.3.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய ரூபா 2,435,400 இற்கான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 8,238,352 இற்கான முத்திரைக்கட்டணம் என்பவற்றை அறவீடு செய்வதற்கான வேலைத் திட்டமொன்று சபையில் காணப்படவில்லை.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதனிக்கப்பட்டன

(அ) சபையினால் பேணப்படும் 03 நடைமுறை கணக்குகளில் 2016 ஆண்டு பூராகவும் காணப்பட்ட மீதிகளின் சராசரி ரூபா 7,010,708 தொகையாக காணப்பட்டதுடன், மிகையாக உள்ள பணத்தை முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் சபைக்கு உழகைக்கக் கூடியதாக இருந்த வட்டி வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

(ஆ) சபையின் அதிகார பிரதேசத்தில் காணி ஏல விற்பனைகளின் போது பொது வசதிகளுக்காக சபைக்கு கிடைத்திருந்த 08 காணித் துண்டகளை பெறுமதி மதிப்பீடு செய்து சொத்துக்கள் பதிவேட்டில் பதிவதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அந்தக் காணிகளின் உரித்தினை பௌதீக ரீதியாக உறுதிப்படுத்திக் கொள்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.2 செயற்பாட்டு திறமையின்மை

சபையில் மூன்று வருமான பரிசோதகர்கள் காணப்பட்ட போதிலும் இரண்டு உப அலுவலகங்களில் இருந்து சேகரித்திருந்த மொத்த வருமானம் ரூபா 416,756 தொகை ஆகும் அவர்களின் கடமைகள் உரியமுறையில் நிறைவேறப்படாமையால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை வருமானம் ரூபா 23,651,170 தொகையாக இருந்தது.

### 3.3 திண்மக் கழிவு பொருள் முகாமைத்துவம்

சபையின் அதிகார பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட இடங்களில் இருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை சபைக்குக் கொண்டு வரப்பட்டு வகைப்படுத்தப்பட்டு மீதியான குப்பைகளை சபைக்கு சொந்தமான இகல்கந்த வத்த எனப்படும் காணியில் குவிக்கப்பட்டது. பிலிசரு செயற்திட்டத்தின் கீழ் கிடைத்திருந்த ரூபா 1,252,311 இற்கான தொகையில் ரூபா 10 இலட்சம் செலவிடப்பட்டு குப்பைகுவிக்கும் காணியில் குப்பைகளை வகைப்படுத்துவதற்காக கட்டிடம் ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அது 03 வருடங்களை விட மிகையான காலம் எதுவித தேவைகளுக்கும் பயன்படுத்தப்படாமல் செயற்படாமல் காணப்பட்டது.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) விளைவற்ற மற்றும் குறைவாக பயன்படுத்தப்படும் சொத்துக்கள்**

சபைக்கு சொந்தமான தற்போது பாவனையில் இருந்து அகற்றியிருந்த 03 வாகனங்கள் தொடர்பாக 2015 ஜுலை 10 திகதி PFD/ASD/02/veh.circular 2015 இலக்க நிதி அமைச்சு சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட்டிருககவில்லை.

**(ஆ) உரித்தாக்கப்படாத சொத்துக்கள்**

சபையினால் பயன்படுத்தப்படும் 05 வாகனங்கள் தொடர்பாக உரிமை சபைக்கு சொந்தமாக காணப்படாததுடன் அவற்றின் உரிமை சபைக்கு உரித்தாக்குவதற்கு மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4 நல்லாளுகையும் கணக்களிப் பொறுப்பும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் உள்ளடங்கிய 08 செலவு விடயங்களில் ரூபா 13,709,267 தொகைக்காக சேமிப்பும், ஒரு செலவு விடயத்தில் ரூபா 775,896 இற்கான பிரதிகூலமான முரண்களும், 04 வருடமான விடயங்களில் ரூபா 2,220,414 இற்கான நெருங்கி இருக்காத இலக்கு வருமானமும் காணப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தபடவில்லை என அவதானிக்கப்பட்டது.

### 4.2 உள்ளகக் கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப் பிரமாணங்கள் 133 மற்றும் 134 இன் ஏற்பாடுகள் மற்றும் உள்ளூராட்சி ஆணையாளர் (தென் மாகாண) இன் 2014 பெப்ரவரி 24 ஆம் திகதி தபபா/யஹ/01/நா.ச.லே சுற்றறிக்கையின் பிரகாரம் உள்ளக கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுச் செயற்படுத்தல்

2009 ஜூன் 09 ஆந் திகதி DMA/2009 (i) இலக்க முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவுவதற்காக மீளாய்வாண்டு இறுதிவரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது கணக்காய்வு ஐயவினாக்கள் மூலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. கீழே விவரிக்கப்பட்டுள்ள முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்த வேண்டும்.

| முறைமைகள் | முறைமையில் முக்கிய குறைபாடுகள் |
|---|---|
| (அ) நிலையான சொத்துக்கள் | (i) சொத்துக்கள் வகுப்பு அடிப்படையில் வெவ்வேறான விபரங்கள் காட்டக்கூடிய விதமாக நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| | (ii) நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ள நிலையான சொத்துக்கள் மீதி தொடர்பாக பண்டக் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |
| | (iii) காணி ஏல விற்பனவுகளின் போது பொது வசதிகளுக்காக வழங்கியிருந்த காணிகள் தொடர்பான பெறுமதியினை மதிப்பீடு செய்து ஆவணப்படுத்தியிருக்கவில்லை. |
| (ஆ) வருமானம் சேகரித்தல் | (i) நிலுவை வருமானத்தை அறவீடு செய்வதற்காக முறையான வேலைத்திட்டமொன்று தயாரித்து செயற்படுத்தியிருக்கவில்லை. |
| | (ii) நிலுவை வருமானம் தொடர்பாக காலப் பகுப்பாய்வு ஒன்று தயாரித்திருக்கவில்லை. |
| (இ) பணியாளர் குழு முகாமைத்துவம் | (i) பிரதேச சபைக்கான அங்கீகரிக்கப்பட்டிருந்த நிரந்தர பதவியணியினை மிகைத்து போடப்பட்டிருந்த மிகை பதவியணியினை முறைப்படுத்துவதற்காகவும், வெற்றிடமாக காணப்பட்ட பதவிகளுக்காக ஆட் |

| | | |
|---|---|---|
| | | சேர்ப்பதற்காகவும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| | | (ii) நீண்ட காலமாகக காணப்படும் நிலுவை ஊழியர் கடன் மீதியை அறவீடு செய்வதற்காக வேலைத்திட்டமொன்று சபையில் காணப்படவில்லை. |
| (ஈ) | பதிவேடுகள் பேணல் | (i) நட்டங்கள், சேதங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை.<br>(ii) பேணப்பட்டுள்ள பதிவேடுகள் பதவி நிலை உத்தியோகத்தர் ஒருவரின் மேற்பார்வைக்கு ஆளாக்கியிருக்கவில்லை. |
| (உ) | வாகன நிருவாகம் | (i) 5 வாகனங்களில் உரிமையை சபைக்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>(ii) சபைக்குச் சொந்தமான வாகனங்களின் எரிபொருள் எரிதல் பரிசோதனை செய்திருக்கவில்லை.<br>(iii) பயன்பாட்டிலிருந்து அகற்றப்பட வேண்டிய வாகனங்களை அகற்றுதல் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஊ) | பாதீட்டுக் கட்டுப்பாடு | பாதீட்டு மதிப்பீடு மற்றும் உள்ளவாறான பெறுமதிகள் மீது கவனம் செலுத்தி பாதீட்டை திருத்தியிருக்கவில்லை. |